செ.வெ.எண்:25 நாள்: 15.05.2018

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டம், மாற்றுத்திறனாளிகளை தேர்தல் நடைமுறையில் பங்குபெறச் செய்தல் குறித்து தலைமை தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகள் பேரில், மாற்றுத்திறனாளிகளில் தகுதியுடைய வாக்காளர்களை, வாக்காளர் பட்டியலில் இடம் பெறச் செய்திடும் பொருட்டு, 17.05.2018 அன்று ஆண்டிடம், 18.05.2018 அன்று குவாகம், 19.05.2018 அன்று தா.பழூர், 22.05.2018 அன்று சுத்தமல்லி, 23.05.2018 அன்று குண்டவெளி, 24.05.2018 அன்று உடையார்பாளையம், 25.05.2018 அன்று ஜெயங்கொண்டம், 26.05.2018 அன்று அரியலூர், 29.05.2018 அன்று நாகமங்கலம், 30.05.2018 அன்று கீழப்பழூர், 31.05.2018 அன்று திருமானூர், 01.06.2018 அன்று ஏலாக்குறிச்சி ஆகிய குறுவட்டங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு முகாம்கள் நடைபெறவுள்ளது.

சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாளன்று மாற்றுத்திறனாளிகள் புதிய வாக்காளர் 18 வயதுடையோர் (தகுதி நாள் 01.01.2000 அன்றோ அல்லது அதற்கு முன்பு பிறந்தவர்கள்), புதியதாக சேரும் வாக்காளர்கள் பெயர் சேர்க்க படிவம் -6, இறப்பு தொடர்பாக படிவம் -7, பெயர் திருத்தல், புகைப்படம் மாற்றம் செய்தல், முகவரி மாற்றம் தொடர்பாக படிவம் -8 மற்றும் ஒரே தொகுதியில் இடம் பெயர்வோர் தொடர்பாக படிவம் -8A படிவங்களை பூர்த்தி செய்து முகாம் நடைபெறும் அன்றே விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து வழங்கலாம். எனவே, அரியலூர் மாவட்டத்தில் உள்ள தகுதியுள்ள மாற்றுத்திறனாளிகள் சிறப்பு முகாம்களில் பங்குபெற்று பயனடையுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**